# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2023

## வளர்தமிழ் 11

சுட்டெண்:

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. "எம் தமிழர் மூதாதை; குன்றெடுத்த தோளான்" என்று இராவணனைப் புகழ்ந்து பாடியவர்

அ) உருத்திரமூர்த்தி ☐ ஆ) நல்லத்துவனார் ☐

இ) காசிஆனந்தன் ☐ ஈ) பாவேந்தர் ☐

2. மாசு, தோடு, ஆறு என்பன

அ) உயிர்த்தொடர்க்குற்றியலுகரம் ☐

ஆ) நெடிற்றொடர்க்குற்றியலுகரம் ☐

இ) இடைத்தொடர்க்குற்றியலுகரம் ☐

ஈ) ஆய்தத்தொடர்க்குற்றியலுகரம் ☐

3. குடிமக்களுக்காக ஆடப்படும் கூத்து

அ) பொதுவியல் ☐ ஆ) மரபியல் ☐

இ) வேத்தியல் ☐ ஈ) அறிவியல் ☐

4. கே என்ற எழுத்தின் மாத்திரை

அ) 1 ☐ ஆ) 1/2 ☐

இ) 2 ☐ ஈ) 1 1/2 ☐

5. சோழநாட்டின் எல்லையாக அமைந்த ஆறு

அ) வைகை ☐ ஆ) தாமிரபரணி ☐

இ) காவேரி ☐ ஈ) கங்கை ☐

6. பல்லி சொல்லும் அதுபோல குரங்கு

அ) குய்யிடும் ☐ ஆ) ஊளையிடும் ☐

இ) அலப்பும் ☐ ஈ) பிளிறும் ☐

7. தமிழர் போற்றத்தக்க கல்

அ) பாறாங்கல் ☐ ஆ) வைரக்கல் ☐

இ) சிற்பக்கல் ☐ ஈ ) நடுகல் ☐

8. உருபு ஏற்காத வேற்றுமைகள்

அ) எட்டாம், ஐந்தாம் வேற்றுமைகள் ☐

ஆ) முதலாம், எட்டாம் வேற்றுமைகள் ☐

இ) முதலாம், ஆறாம் வேற்றுமைகள் ☐

ஈ ) நான்காம், ஏழாம் வேற்றுமைகள் ☐

9. நான்காவது தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்ற இடம்

அ) தமிழ்நாடு ☐ ஆ) பாரிசு ☐

இ) மலேசியா ☐ ஈ ) யாழ்ப்பாணம் ☐

10. எல்லாளனுக்கு முன் அநுராதபுரத்தைக் கைப்பற்றி இருபத்திரண்டு ஆண்டுகள் ஆட்சி செய்த தமிழ் மன்னர்கள்

அ) அசேலன், எல்லாளன் ☐ ஆ) துட்டகெமுனு, அசேலன் ☐

இ) காகவனத்தீசன், குத்திகன் ☐ ஈ ) சேனன்,குத்திகன் ☐

11. கோவலன் கழிப்பெருஞ் செல்வத்தை இழந்தான். இதில் இரண்டாம் வேற்றுமை உருபு ஏற்ற சொல்

அ) செல்வம் ☐ ஆ) இழந்து ☐

இ) கழி ☐ ஈ ) கலங்கினான் ☐

12. “முந்தும் மனவெறி மொழிகளில் அமையின் முன்பின் இங்கொணாத கலை மலரும்” என்று கூறியவர்

அ) தாமோதரம்பிள்ளை ☐ ஆ) விபுலாநந்தஅடிகள் ☐

இ) விவேகானந்தர் ☐ ஈ ) ஆறுமுகநாவலர் ☐

13. பால்தேன் என்பது

அ) உவமைத்தொகை ☐ ஆ) பண்புத்தொகை ☐

இ) வினைத்தொகை ☐ ஈ) உம்மைத்தொகை ☐

14. திலீபன் __________ நாட்கள் உண்ணாநோன்பு இருந்தார்.

அ) பன்னிரண்டு ☐ ஆ) ஏழு ☐

இ) பதினெட்டு ☐ ஈ ) ஒன்பது ☐

15. "தேனோ திரவியமோ" என்ற பாடலில் பிள்ளைக்கு ஒப்பிடப்படும் பழம்

அ) விளாம்பழம் ☐ ஆ) மாம்பழம் ☐

இ) பலாப்பழம் ☐ ஈ ) மாதுளம்பழம் ☐

16. "கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பர்". இதில் கானவர்கள் என அழைக்கப்படுபவர்

அ) வேடர்கள் ☐ ஆ) தேவர்கள் ☐

இ) வானரங்கள் ☐ ஈ ) அரசர்கள் ☐

17. நீந்து என்ற வினையடியின் இறந்தகாலப் படர்க்கைப் பன்மை வினைமுற்று

அ) நீந்தினோம் ☐ ஆ) நீந்தினார்கள் ☐

இ) நீந்துவார்கள் ☐ ஈ ) நீந்தினீர்கள் ☐

18. ஐந்து நரம்புள்ள வீணையின் இசை

அ) பண் ☐ ஆ) அராகம் ☐

இ) திறம் ☐ ஈ ) தாளம் ☐

19. ஆற்றில்கரைத்த புளி போல என்ற உவமைத்தொடர் விளக்கும் கருத்து

அ) துன்பத்தில் உதவுதல் ☐ ஆ) பூசிமெழுகுதல் ☐

இ) பிரியாநட்பு ☐ ஈ) பயனற்ற செயல் ☐

20. புலவர் குழந்தை எழுதிய நூல்

அ) இராவணகாவியம் ☐ ஆ) மகாபாரதம் ☐

இ) இராமாயணம் ☐ ஈ) சீவகசிந்தாமணி ☐

21. மாரி விளைச்சலால் உழவர்கள் மகிழ்ந்தனர். இதில் வந்துள்ள ஆகுபெயர்

அ) சினையாகுபெயர் ☐ ஆ) தொழிலாகுபெயர் ☐

இ) காலவாகுபெயர் ☐ ஈ) இடவாகுபெயர் ☐

22. கற்குகை என்பது

அ) தோன்றற்புணர்ச்சி ☐ ஆ) திரிதற்புணர்ச்சி ☐

இ) கெடுதற்புணர்ச்சி ☐ ஈ) இயல்புப்புணர்ச்சி ☐

23. நூல்நிலையங்கள் தோற்றம் பெற்ற நூற்றாண்டு

அ) 19 ஆம் ☐ ஆ) 20 ஆம் ☐

இ) 18 ஆம் ☐ ஈ) 21 ஆம் ☐

24. நிலநடுக்கத்தினால் இடியுண்ட வீடுகளின் கற்கள் குவியல்குவியலாகக் காணப்படுகின்றன. இதில் குவியல்குவியல் என்பது

அ) இரட்டைக்கிளவி ☐ ஆ) அடுக்கிடுக்குத்தொடர் ☐

இ) அடுக்குத்தொடர் ☐ ஈ) இணைமொழி ☐

25. கலக்கம் என்பதன் எதிர்ச்சொல்

அ) அறிவு ☐ ஆ) உயர்வு ☐

இ) தாழ்வு ☐ ஈ) தெளிவு ☐

26. வா, போ, இரு என்பன

அ) செயப்படுபொருள் குன்றாவினை ☐ ஆ) குறிப்புவினை ☐

இ) செயப்படுபொருள் குன்றியவினை ☐ ஈ) தன்வினை ☐

27. கூத்தர் குலமகளிர்

அ) ஆய்ச்சியர் ☐ ஆ) இடைச்சியர் ☐

இ) குறத்தியர் ☐ ஈ) விறலியர் ☐

28. "வா தோழியே!...." என்ற பாடலை எழுதியவர்

அ) அம்பி ☐ ஆ) உதயை வீரையன் ☐

இ) இரவி ☐ ஈ) சாலைஇளந்திரையன் ☐

29. செல்வான் என்ற வினைமுற்றின் இடைநிலை

அ) வ் ☐ ஆ) செல் ☐

இ) ஆன் ☐ ஈ) செய் ☐

30. பேட்டி என்ற வடசொல்லின் தமிழ்ச்சொல்

அ) உடன்பாடு ☐ ஆ) பட்டிமன்றம் ☐

இ) நேர்காணல் ☐ ஈ) அறிவுரை ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

“கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்தகுடி” என்ற சிறப்புக்குரிய இனம் நம் தமிழினம். இவ்வினம் கலை, மொழி, பண்பாடு, வரலாறு என எல்லாத் துறைகளிலும் சிறப்புற்று விளங்கியது. தமிழ்மொழி உலகச் செம்மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டமை தமிழர்களாகிய நமக்குப் பெருமை தரும் செய்தியாகும். பல்வேறு மொழிகளில் இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று கூறுகள் இருந்தாலும் அந்த மூன்று கூறுகளை உடைய மொழி என எந்த மொழியும் அடையாளப்படுத்தப்படவில்லை. நம் தாய்மொழியாகிய தமிழ் மட்டுமே மூன்று கூறுகளை உடையது என்பதைக் குறிக்கும் வகையில் முத்தமிழ் என சிறப்பிக்கப்படுகிறது. ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்ட தமிழ்மொழி இன்று அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப கணினியிலும் கைப்பேசியிலும் பயன்படுத்தும் வகையில் முன்னேற்றம் அடைந்துள்ளது. தமிழ்மொழி இலக்கணக் கட்டொழுங்கு, வேர்ச்சொல், சொல்லுருவாக்கம் போன்றவற்றில் வரையறுக்கப்பட்ட மொழியியற் கோட்பாட்டை உடையது. மொழிகளுக்கு எல்லாம் தாய்மொழியாக உள்ள நம் தமிழ்மொழி நடுநிலைமை, தனித்து இயங்கும் தன்மை, இலக்கண இலக்கிய வளம், கலை நயம், உயர்ந்த சிந்தனை போன்ற பண்புளைக் கொண்டதால்தான் தமிழ்மொழி செம்மொழி என்ற பெயரைப் பெற்றுள்ளது. தமிழில் எழுந்த இலக்கியங்கள், இலக்கணங்கள், புதுக்கவிதைகள், கட்டுரைகள், நாவல்கள் சிறுகதைகள் தமிழை வளர்த்தன. தமிழின் மேன்மைக்காகப் போராட வேண்டியது தமிழரின் கடமையாகும்.

1. தமிழ்மொழி செம்மொழி என்ற பெயரைப் பெற்றமைக்கான கரணியங்கள் யாவை?

______________________________________________

______________________________________________

2. தமிழ்மொழி எத்தகைய மொழியியற் கோட்பாட்டை உடையது?

______________________________________________

______________________________________________

3. தமிழினம் எவற்றில் சிறப்புற்று விளங்கியது?

______________________________________________

______________________________________________

4. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்தகுடி எது?

______________________________________________

______________________________________________

5. தமிழரின் கடமை எதுவெனக் கூறப்பட்டுள்ளது?

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. இலங்கை சோழர் ஆட்சியுடன் எத்தனை ஆண்டுகள் இணைந்திருந்தது?

2. நெஞ்சையள்ளும் மணியாரம் எனப் புகழப்படும் நூல் எது?

3. யாழ்நூலகம் திறந்து வைக்கப்பட்ட ஆண்டு எது?

4. நண்டுச்சாறு காய்ச்சி விட்டு
நடுவரப்பில் போறபெண்ணே - உன்
தண்டைக்காலு அழகைக் கண்டு
கெஞ்சுறானாம் அஞ்சுமாசம் ......இது யாரால், யாருக்குக் கூறப்பட்டது?

5. இராவணன் கற்ற கலைகள் எத்தனை? பாடத்தில் கூறப்பட்ட கலைகள் இரண்டைத் தருக.

6. மும்முடிச்சோழ மண்டலம் என அழைக்கப்பட்ட நாடு எது?

7. கோவலன் வெட்டுண்டபோது ஆயர்பாடியில் தோன்றிய தீக்குறிகள் இரண்டைத் தருக.

புள்ளிகள் 10

**4. பத்து வரிகளுக்குக் குறையாமல் படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுக. அல்லது கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**

1.



2. நல்லவனாய் வாழ்ந்த மகன்
நாட்டிற்காய் வீழ்ந்த மகன்

புள்ளிகள் 10

## 5) அ) பந்தியை வாசித்து இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.

விளைச்சல் நிறைந்த நெல்வயல்கள். அவ் வயல்களின் முற்றாத இளங்கதிர்களை உண்ட எருமைக்கன்றுகள் அங்கே இருக்கும் அடர்ந்த பச்சை மரங்களின் கீழே துள்ளித்துள்ளி விளையாடுகின்றன. வானுயர்ந்த தென்னைமரங்கள், குலைதள்ளிய வாழைமரங்கள் அழகாகக் காட்சி அளிக்கின்றன. அருகே அழகு நிறைந்த பல வீடுகள் காணப்படுகின்றன. வீட்டு முற்றங்களில் காயவைத்த வற்றல், கூலம் போன்றவற்றை உண்ணவரும் கோழிகளை மகளிர் கலைக்கின்றனர்.

1. தொழிற்பெயர் ஒன்று தருக.

______________________________

2. சிறப்புப்பெயரோடு பொதுப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

______________________________

3. அடுக்குத்தொடர் ஒன்று தருக.

______________________________

4. இங்கு இடம்பெற்றிருக்கும் உயர்வு நவிற்சியணியைத் தருக.

______________________________

5. உயிர்த்தொடர்க்குற்றியலுகரம் ஒன்று தருக.

______________________________

6. குணப்பெயருக்கு எடுத்துக்காட்டுத் தருக.

______________________________

7. எதிர்மறைப் பெயரெச்சம் ஒன்று எழுதுக.

___

8. இடப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

___

9. வாழ்ந்தனர் என்ற சொல்லின் பகுதி,விகுதி,இடைநிலையைத் தருக.

___

10. ஏழாம் வேற்றுமை உருபு ஏற்ற சொல் எது?

___

புள்ளிகள் 10

**ஆ) 1. பின்வரும் அடுக்குத்தொடரின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.**

அலைஅலையாக ___

___

உழைத்து உழைத்து ___

___

புள்ளிகள் 03

**2. பின்வரும் தொகைகளுக்கு எடுத்துக்காட்டுத் தருக.**

வினைத்தொகை ___

உவமைத்தொகை ___

புள்ளிகள் 02

**6) தரப்பட்டுள்ள சொற்குவியலில் இருந்து கருத்துக்குப் பொருத்தமான பழமொழிகளைக் கண்டறிந்து எழுதுக.**

இரக்கப் கல்வி வேண்டும் மிஞ்சினால்

விளக்கானாலும் நஞ்சு எழுத்து ஆடு

அமிழ்தமும் சிறக்கப் தூண்டுகோல் சிலையில் சுடர்

இளமையிற் ஓநாய் போ என்று அழுகிறது

நனைகிறது போனாலும் அளவுக்கு

1. வறுமையிலும் செம்மையாய் இரு.

________________________________________

2. ஊக்கம் கொடுத்தல்.

________________________________________

3. பருவத்திலே பயிர் செய்.

________________________________________

4. எதற்கும் எல்லையுண்டு.

________________________________________

5. ஏமாற்றி அழிக்கும் செயல்.

________________________________________

| புள்ளிகள் 05 |
|---|

## 7) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

நல்லவரோடு நட்புக் கொள்வதே சிறந்தது. அவர்களோடு பேசுவதும் பழகுவதும் நல்ல அறிவை வளர்க்கும். நமக்குத் துன்பம் வந்த காலத்திலே அத்தகையோர் விரைந்து உதவுவர். நமது துன்பத்தை தமது துன்பமாகக் கருதி வருந்துவர். உள்ளத்திலே நல்லன்பு அற்றவருடைய நட்பு துன்பந் தரும். ஆகவே, நாம் ஒருவரோடு நட்புக்கொள்ள விரும்பினால் அவர் எத்தகையவர் என்று அறிந்தே நட்புக்கொள்ள வேண்டும்.

புள்ளிகள் 05

**8) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ இராவணனது சிறப்பியல்புகளும் அவனது ஆட்சியும

- ✸ நாட்டார்பாடல்கள்

- ✸ நீர் விரும்பும் புலவர்

- ✸ ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

புள்ளிகள் 15